

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதி கிழக்கு ஒன்றியம் சார்பில் நடந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார். இதில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.கதிர் ஆனந்த், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.தயாளமூர்த்தி, மத்திய ஒன்றியச் செயலாளர் எல்.ரவிச்சந்திரன், மாவட்டத் துணைச் செயலாளர்கள், ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கவுன்சிலர்கள், ஒன்றியக் கவுன்சிலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற மத்திய, வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் அவைத் தலைவர் பேரூர் தர்மலிங்கம், அம்பிகாபதி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு, மாநகர மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பாண்டியன், ஸ்டாலின் குமார், கதிரவன், பழனியாண்டி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, ஊராட்சி தலைவர் தர்மன், ராஜேந்திரன், ராஜேந்திரன், முத்துச்செல்வம், காஜாமலை விஜய், விஜயா ஜெயராஜ், சேர்மன் துரைராஜ், டோல்கேட் சுப்பிரமணி, இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், கார்த்திக் உள்ளிட்ட பகுதிச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி தொண்டரணி என ஆயிரக்கணக்கான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வைணவத் திருக்கோயில்களுக்கான – கட்டணமில்லா

# ஆன்மிகப் பயணத்திற்கு - மூத்த குடிமக்கள் விண்ணப்பிக்கலாம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை, ஆக. 31-

புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோ யில்களுக்கான கட்டணமில்லா ஆன்மிகப் பயணத்திற்கு மூத்த குடிமக்கள் விண்ணப்பிக்கலாம் என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2024-2025 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களில் அமைந்துள்ள முக்கிய வைணவத் திருக்கோயில்களுக்கு புரட்டாசி மாதத்தில் மேற்கொள்ளும் ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் மூத்த குடிமக்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் மக்கள் தெய்வ வழிபாட்டை தொன்று தொட்டுப் போற்றி வருகின்றனர். பல்வேறு திருக்கோயில்களுக்கு ஒரே நாளில் சென்று வழிபடுவதை பெரும் விருப்பமாகக் கொண்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு, 2024 - 2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பில், "ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் பிரசித்தி பெற்ற வைணவத் திருக்கோயில்களுக்கும் இறை தரிசனம் கிடைக்க இயலாத 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட, தலா 1,000 பக்தர்கள் அழைத்து செல்லப்படுவர். இதற்கான செலவினத் தொகை ரூ.50 இலட்சம் அரசு நிதியாக வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், சென்னை, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களில் அமைந்துள்ள முக்கிய வைணவத் திருக்கோயில்களுக்கு புரட்டாசி மாதத்தில் மேற்கொள்ளும் ஆன்மிகப் பயணத்தில் 1,000 மூத்த குடிமக்கள் கட்டணமின்றி (உணவு உட்பட) அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

புரட்டாசி மாத வைணவத் திருக்கோயி ல்களுக்கான ஆன்மிகப் பயணம் நான்கு கட்டங்களாக, அதாவது 21.09.2024, 28.09.2024, 05.10.2024, 12.10.2024 ஆகிய நாட்களில் அந்தந்த மண்டலங்களில் தொடங்கப்பட உள்ளன.

சென்னை மண்டலத்தில் திருவல்லிக்கேணி. பார்த்தசாரதி திருக்கோயில், பெசன்ட் நகர், அஷ்டலட்சுமி திருக்கோயில், திருவிடந்தை, நித்திய கல்யாண பெருமாள் திருக்கோயில், மகாபலிபுரம், ஸ்தல சயன பெருமாள் திருக்கோயில், திருநீர்மலை, நீர்வண்ண பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

காஞ்சிபுரம் மண்டலத்தில் காஞ்சிபுரம், தேவராஜ பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம், வைகுண்ட பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம், விளக்கொளி பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம், பாண்டவதூத பெருமாள் திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர், ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

விழுப்புரம் மண்டலத்தில் விழுப்புரம், ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயில், விழுப்புரம், வைகுண்ட பெருமாள் திருக்கோயில், கோலியனூர், வரதராஜ பெருமாள் திருக்கோயில், பூவரசங்குப்பம் லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், பரிக்கல், லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை மண்டலங்களில் கும்பகோணம், சக்கரபாணி பெருமாள் திருக்கோயில், கும்பகோணம், சாரங்கபாணி பெருமாள் திருக்கோயில், உப்பிலியப்பன்கோயில், வெங்கடாசலபதி திருக்கோயில், நாச்சியார்கோயில், ஸ்ரீநிவாச பெருமாள் திருக்கோயில், திருச்சேறை, சாரநாத பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

திருச்சி மண்டலத்தில் ஸ்ரீரங்கம், அரங்கநாத சுவாமி திருக்கோயில், உத்தமர்கோயில், புருஷோத்தம பெருமாள் திருக்கோயில், அன்பில், சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில், திருவெள்ளறை. புண்டரீகாட்ச பெருமாள் திருக்கோயில், கோவிலடி, அப்பகுடத்தான் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

மதுரை மண்டலத்தில் அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயில், ஒத்தக்கடை, யோக நரசிம்ம பெருமாள் திருக்கோயில், திருமோகூர், காளமேகப் பெருமாள் திருக்கோயில், திருக்கோஷ்டியூர், சௌமிய நாராயணப் பெருமாள் திருக்கோயில், மதுரை, கூடலழகர் பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மண்டலங்களில் பெருங்குளம், மாயக்கூத்தர் திருக்கோயில், இரட்டை திருப்பதி, அரவிந்தலோசனர் திருக்கோகோயில், கள்ளபிரான், தேவர்பிரான் திருக்கோயில், இரட்டை திருப்பதி திருக்கோயில், நத்தம், விஜயாசன பெருமாள் திருக்கோயில், திருப்புளியங்குடி, காய்சினி வேய்ந்த பெருமாள் திருக்கோயில், தென்திருப்பேரை, மகர நெடுங்குழைக்காதர் திருக்கோயில், ஆழ்வார் திருநகரி, ஆதிநாத ஆழ்வார் திருக்கோயில், திருக்கோளூர், வைத்தமாநிதி பெருமாள் திருக்கோயில், கள்ளபிரான், வைகுண்ட பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும், இது தொடர்பான விபரங்களுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 1757, சென்னை மண்டலத்திற்கு 044-29520937, 9941720754, காஞ்சிபுரம் மண்டலத்திற்கு 044-29592380, விழுப்புரம் மண்டலத்திற்கு 04146-225262, மயிலாடுதுறை மண்டலத்திற்கு 04364-299258, 8807756474, தஞ்சாவூர் மண்டலத்திற்கு 04362-238114, திருச்சி மண்டலத்திற்கு 0431-2232334, மதுரை மண்டலத்திற்கு 0452-2346445, தூத்துக்குடி மண்டலத்திற்கு 0461-2341144, திருநெல்வேலி மண்டலத்திற்கு 0462-2572783 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். ஆகவே, புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோயில்களுக்கு ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் மூத்த குடிமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு இறை தரிசனம் பெறலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

## மோடி தலைமையிலான

# ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் - நீதியை எதிர்பார்ப்பதுகூட குற்றமே!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி விமர்சனம்!



புதுடெல்லி, ஆக 31-

மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க., ஆட்சியில் நீதியை எதிர்பார்ப்பது கூட குற்றம் தான் என்று மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில்,

மோடி ஆட்சியில் எந்த நல்லதைத்தான் எதிர்பார்க்க முடியும் என்று வினவியுள்ளார். பலவீன மானவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் எதிரான மிக கடுமையான சம்பவங்களில் கூட குற்றங்களை மறைக்கும் முயற்சிகள்தான் நடைபெற்று வருகின்றன என்று அவர் சாடியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் ஃபரூக்காபாத்தில் இரு சிறுமிகள் மர்மமான முறையில் உயிரிழந்த விவகாரம் மிகவும் துரதிருஷ்டவசமானது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நீதி வழங்காமல், அவர்களை மேலும் புண்படுத்துவது பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்று என்று ராகுல்காந்தி குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் எவ்வளவு காலத்துக்குதான் மோடி ஆட்சியின் அவலங்களை பொறுத்துக் கொள்ள முடியும் என்று அவர் சாடியுள்ளார்.

இது நம் சமூகம் முன்பு நிற்கும் முதல் கேள்வி என்று ராகுல் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு என்பது இந்திய பெண்கள் ஒவ்வொருவரின் உரிமை என்று தெரிவித்துள்ள அவர், நீதி என்பதும் துன்பப்படும் ஒவ்வொரு குடும்பத்தின் உரிமை என்று பதிவிட்டுள்ளார்.



வனத்துறை அமைச்சர், மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் வனப்பாதுகாப்பிற்காக வனத்துறையின் மூலம் மேற்கொண்டு வரும் வளர்ச்சி பணிகள் முன்னேற்றம் குறித்தான ஆய்வு கூட்டம் நேற்று முன்தினம் (29.08.2024) கிண்டி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறைத்தலைவர் சுதன்ஷீ குப்தா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர், சீனிவாஷ் ஆர்.ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (புலிகள் திட்டம்) ராகேஷ்குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்), தெபாஷிஷ் ஜானா உள்ளனர்.

